பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 07 வெள்ளிக்கிழமை 24.09.2021 கதிர் 187

## வவுனியாவில் மேலும் 47 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 47 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப்

☞2

# கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமையை அவமதித்த யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் திட்டவட்டம்

(இ.கலையமுதன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலிடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே அஞ்சலி செலுத்த முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப் படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். கஜேந்திரனின் நாடாளுமன்ற சிறப்புரிமையை அவமதித்த யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இன்று அவரது கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடா வருடம் குடும்பத்தோடு அமைதியாக

☞2



# அரசுடன் நேரடிப் பேச்சுக்கு செல்பவர்கள் துரோகிகள்!



## சீறுகின்றார் சிவாஜிலிங்கம்

(இ.கலையமுதன்)

**அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேசச் செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு செல்பவர்களை நாங்கள் துரோகிகளாக அறிவிப்போம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்**

**யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறையிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

☞2

## இறக்குமதி கட்டுப்பாடுள்ள பொருள்களுடன் இந்தியாவிலிருந்து வந்த 30 பேர் சிக்கினர்!

இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பொருள்கள் சிலவற்றை இலங்கைக்குக் கொண்டு வந்த 30 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2

## 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்கத் தகுதி!

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் ஜி.சீ.ஈ. உயர்தரத்துக்குத் தெரிவாகியுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடநெறிக்கான செயன்முறைப்

☞2

## ஊரடங்கு நீங்கியதும் பாடசாலைகள் நான்கு கட்டங்களாக மீண்டும் ஆரம்பம்

### கல்வி அமைச்சு உத்தியோகபூர்வ அறிவிப்பு



நாட்டில் நான்கு கட்டங்களாகப் பாடசாலைகளை மீளத் தொடங்கத் தயாராகி வருவதாகக் கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டதன் பின்னர், சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கு அமைய, முறையான திட்டங்களுடன் பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

☞2

## வவுனியாவில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 5 வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தல்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டதாக பிரபல சுப்பர் மாக்கட் உட்பட 5 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

வவுனியாவில் கொரோனாப் பரவல் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படல் மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது செயற்படல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

☞2

## சட்டவிதிகளை மீறிய மேலும் 418 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய மேலும் 418 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 48 வாகனங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரையான

☞2

## அரசுடன் நேரடிப் பேச்சுக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றியுள்ளார். இலங்கையில் ஆட்சித் தலைவர்களாக இருப்பவர்கள் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாகவே உள்ளது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச்செயலாளர் பான் கீ- மூன் இலங்கைக்கு வந்து முள்ளிவாய்க்கால் பகுதியைப் பார்த்த பின்னர் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தார்.

தமிழர் நலன்சார் விடயங்கள் தொடர்பில் இந்தியாவுக்குப் பலவற்றை ராஜபக்ஷவினர் சொன்னார்கள். ஆனால், இதுவரை எவையும் நிறைவேற்றப்படவில்லை. 13 பிளஸ் என்றார்கள். ஆனால், 13வது திருத்தமே சந்தேகமாக உள்ளது.

குற்றவாளியே எவ்வாறு நீதிபதியை நியமிக்க முடியும்? சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சர்வதேசப் பொறிமுறை ஊடாகவே நீதி கிடைக்கும். அதன்மூலமே வடக்கு கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் நமக்கான பரிகாரம் கிடைக்கும்.

ஒரு நாட்டினுடைய மத்தியஸ்தத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது மூன்றாம் தரப்பு இல்லாமல் யாரும் பேச முடியாது. புலம்பெயர்ந்த அமைப்புக்களாக இருக்கட்டும். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கட்டும். சர்வதேச மத்தியஸ்த குழு ஒன்றை வைத்தே அரசுடன் பேச வேண்டும். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது.

எங்களுடைய மக்கள் சார்பில் யாரும் தன்னிச்சையாக எந்த வெளிநாட்டு அமைப்பாக இருந்தாலும் உள்நாட்டில் இருக்கக்கூடிய கட்சியோ கூட்டணியோ பேச முடியாது. அதை நாங்கள் தெட்டத் தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம்.

சர்வதேச மத்தியஸ்தத்துடன் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். அரசனை நம்பி புருஷனைக் கைவிடுவதைப் போல் மீண்டும் மீண்டும் இலங்கை அரசை நம்பி ஏமாறுவோமாக இருந்தால் எங்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது.

இருக்கின்ற பிரச்சினைகளை நீர்த்துப் போகச் செய்கின்ற நிகழ்ச்சி நிரலே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக நீதி கிடைப்பதற்கான அரசியல் தீர்வை நோக்கி நாம் முன் நகரவேண்டும்.

உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை புலம்பெயர் தமிழர்களிடமும் தொப்புள் கொடி உறவுகளான தாய்த் தமிழக மக்களிடமும் தாயகத்தில் உள்ள மக்களிடமும் மிகவும் பணிவாகக் கேட்க விரும்புவது, இந்தச் சந்தர்ப்பத்திலே அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேச்சுக்குச் செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு செல்பவர்களை நாங்கள் துரோகிகளாக அறிவிப்போம் - என்றார்.

## இறக்குமதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா சென்று நாடு திரும்பிய கொழும்பைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சுநந்த சில்வா தெரிவித்தார்.

இதன்போது, சுங்கத்தால் கைப்பற்றப்பட்டுள்ள பொருள்களின் பெறுமதி 40 லட்சத்துக்கும் அதிகம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தேகநபர்கள் 472 கிலோகிராம் மஞ்சள், 352 கிலோகிராம் ஏலக்காய் மற்றும் மருந்துப்பொருள்களை தமது பொதிகளில் மறைத்து வைத்து கொண்டு வந்துள்ளனர் என்றும் சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## 2 லட்சத்து 36 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் இடம்பெறாததால், அந்த விடயதானம் இன்றியே பெறுபேறு வெளியிடப்பட்டது.

இதன்படி மேற்படி செயன்முறைப் பரீட்சை பெறுபேறுகள் இன்றி 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பாடசாலைகள் ஆரம்பமானதும், செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, அதன் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## வவுனியாவில் ஊரடங்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மக்களை ஒன்றுகூட்டி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

அந்தவகையில், மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கட், தர்மலிங்கம் வீதியில் இலத்திரனியல் விற்பனை நிலையமும், குருமன்காடு பகுதியில் சுப்பர் மார்க்கட் ஒன்று, ஹொரவப்பொத்தானை வீதியில் இரு வர்த்தக நிலையங்கள் என 5 வர்த்தக நிலையங்கள் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டன. (100)

## சட்டவிதிகளை மீறிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 77 ஆயிரத்து 543 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கஜேந்திரன் எம்.பியின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்துவார். அதுபோல் இம்முறையும் கடந்த நாள்களாக அஞ்சலி செலுத்தி வந்தார்.

ஆனால், நேற்றைய தினம் அஞ்சலி செலுத்த முயன்றபோது அங்கிருந்த பொலிஸார் தடுத்தனர். எதற்காகத் தடுக்கிறீர்கள்? நீதிமன்ற தடை உத்தரவு உள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினவினார்.

எனினும், பொலிஸார் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவுகூர முடியாது எனக் கூறியே அவ்விடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைக் கைதுசெய்தனர்.

எனினும், கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டு விடுவிக்கும் நேரத்தில் நினைவுகூர்வது தவறு என நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைதுசெய்தோம் என்று பொலிஸார் கூறினர்.

கஜேந்திரன் எம்.பி. அவ்விடத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே நினைவேந்தல் செய்ய முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். அராஜகமாக கஜேந்திரனின் உடலைப் பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

அவர் கைது செய்யப்பட்டதை அறிந்து அவ்விடத்துக்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர்.

கொரோனா விதிமுறைகளை மீறினார் என கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டிருந்தால் அவர் அந்த நினைவிடத்துக்குச் சென்றபோதே கைதுசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஏன் கற்பூரம் ஏற்றி நினைவேந்தல் செய்ய முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டார்?

கஜேந்திரன் எம்.பியைக் கைது செய்தமைக்கு கொரோனா விதிமுறைகள் காரணமல்ல நினைவேந்தல் செய்தமையே காரணம் எனத் தெரிகின்றது. ஏனெனில் நினைவேந்தல் மேற்கொண்ட இடத்தில் கஜேந்திரன் எம்.பி. மாத்திரம் இருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் இருந்தார்கள். திலீபனின் நினைவித்தில் பொலிஸார் வந்ததை அறிந்ததும் பல பொதுமக்களும் கூடினார்கள்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் எம்.பி. மீது நடவடிக்கை எடுத்திருந்தார்கள் எனில் ஏன் அங்கு கூடிய மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. உண்மையில் கஜேந்திரன் எம்.பி. சுகாதார விதிமுறைகளை மீறவில்லை. அவர் நினைவேந்தல் மேற்கொண்டமைக்காவே கைதுசெய்யப்பட்டார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். எதிர்வரும் 27 ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளைப் பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்கும் தெரியாமல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம்.

ஐ.நா. அமர்வுகள் நடைபெறுகின்ற நிலையில் கூட பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். கஜேந்திரனை கண்ணியமாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாது கற்பூரம் கொளுத்தும்போதே பொலிஸார் நினைவேந்தலைத் தடுக்கும் முகமாக செயற்பட்டனர்.

தமிழ்த் தேசத்து மக்களின் உரிமைகள் தொடர்பில் இந்த அரசு கொடுக்கும் எந்தவொரு வாக்குறுதியையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாகக் கூறுகின்றோம் - என்றார்.

## ஊரடங்கு நீங்கியதும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் கட்டமாக 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 5 ஆயிரத்து 131 பாடசாலைகளையும் மற்றும் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட 3 ஆயிரத்து 784 பாடசாலைகளையும் ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் அதிகாரிகளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் இரண்டு வாரங்களில், கல்வி துறைசார் அதிகாரிகள் தமக்குப் பொறுப்பான கல்வி வலயங்களில் சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கு ஏற்ப பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்த சாத்தியக்கூறுகளை ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## வவுனியாவில் மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக கொரோனாத் தொற்று 47 நபர்களுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கட்டவிழ்கிறது சர்வாதிகாரம்

கெரவலப்பிட்டியில் உள்ள யுகதவானி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குரிமையை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்கும் அரசுத் தலைமையின் ஒருதலைப்பட்சமான முடிவு பெரும் விபரீதங்களை ஏற்படுத்தப் போகின்றது என்று நிபுணர்களின் தேசிய முன்னணி எச்சரித்திருக்கின்றது.

உரிய நிபுணத்துவ ஆலோசனை பெறப்படாமல் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்துக்கு சட்டமா அதிபர் அனுமதி அளித்து இருக்கின்றாரா, அப்படியாயின் என்ன அடிப்படையில் அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு கேள்வி எழுப்பியிருக்கிறது.

நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தங்குதடையின்றி வலுவை – எரிபொருளை – விநியோகிக்கும் அரசின் தனித்துவ உரிமை, இந்த பங்குரிமை மாற்றத்தோடு கை நழுவி போகின்றது. நாட்டின் மின் உற்பத்தி நிலையங்களைக் கையாளும் அதிகாரம் எங்கோ அமெரிக்காவில் இருக்கும் நிறுவனத்தின் கைகளுக்கு மாறுவது மிகவும் ஆபத்தானது. இத்தகைய விபரீதமான, முட்டாள்தனமான முடிவை எதேச்சாதிகாரமாக அரசுத் தலைமை எடுக்கக்கூடாது, எடுக்க முடியாது என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த ஒப்பந்த விதிகளின்படி, அதையொட்டி சர்ச்சைகள் ஏற்படும்போது, அந்தப் பிரச்சினை இலங்கையின் நீதித்துறைச் சட்டங்களின்படி கையாளப்பட முடியாது, சர்வதேச சட்டங்களின்படி தான் கையாளப்படும் என்ற ஏற்பாடு மிகவும் ஆபத்தானது. நாட்டின் மின் விநியோகப் பொறுப்பை அரசு மறைமுகமாக வலிந்து, வெளிநாட்டின் தனியார் தரப்பு ஒன்றிடம் அதை கையளித்து, தெரிந்தும் தெரியாமலும் தன்னைத்தானே சிக்கலுக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் தள்ளுகின்றது என்று சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அரசை வைகின்றார்கள்.

ஆளும் கட்சியின் கூட்டமைப்புக்குள் இருக்கும் பொதுஜன பெரமுன தவிர்ந்து ஏனைய கட்சிகள் எல்லாம் கூட இந்த ஒப்பந்தத்தை ஒட்டுமொத்தமாக எதிர்க்கின்றன. அதேநேரம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகியனவும் தேசிய சொத்தை – அதிகாரத்தை – வெளித்தரப்புகளுக்கு விற்கும் இந்த ஏற்பாட்டை முழுமூச்சில் விமர்சிக்கின்றன. இந்த முடிவை முழு மூச்சில் கண்டிக்கின்றன.

ஆட்சியும் அதிகாரமும் தங்களின் கைகளில் இருக்கின்றன என்பதற்காக நாட்டின் தேசிய சொத்துரிமையை – அதுவும் முழு நாட்டுக்கான மின் விநியோகம் என்ற அத்தியாவசிய நடவடிக்கையை தீர்மானிக்கின்ற உரித்தை – வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்றுத்தள்ளும் எதேச்சாதிகார முடிவை ஒருதலைப்பட்சமாக ஆட்சியாளர்கள் எடுக்கக் கூடாது, எடுக்க முடியாது. இது தேசிய சொத்துரிமை மட்டுமல்ல, தலை போகின்ற மிக மிக அத்தியாவசிய சேவை ஒன்று குறித்துத் தீர்மானிக்கும் விடயமும் கூட.

தனது அரசுக் கூட்டின் பங்காளிக் கட்சிகள், பிரதான எதிர்க்கட்சிகள் போன்றவை எல்லாவற்றுக்குமே இவ்விடயத்தில் தீர்மானிக்கும் உரிமையும் அதிகாரமும் உண்டு என்பதை ஆட்சிப் பீடம் உணர்ந்து கொள்ள வேண்டும், அவற்றின் சம்மதமில்லாமல் இத்தகைய தீர்மானங்களை தன்பாட்டில் – எதேச்சாதிகாரமாக அரசுத்தலைமை எடுத்து, நடவடிக்கைகளை மேற்கொள்வது சர்வாதிகாரமன்றி வேறில்லை.

# சர்வாதிகாரப் போக்கை உடன் நிறுத்து தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



தோட்ட முகாமையாளரின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தும் டிஜிற்றல் தராசு வேண்டாம் எனக் கோரியும் பொகவந்தலாவை கீழ்ப் பிரிவு தொழிலாளர்கள் நேற்று (வியாழக்கிழமை) கவனவீர்ப்புபோராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பொகவந்தலாவை பெருந்தோட்டக் கம்பனிக் குட்பட்ட பொகவந்தலாவை கீழ்ப்பிரிவு சின்டாகட்டி கோயில் முன்றிலிலே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர் தெரிவித்தவை வருமாறு –

'டிஜிற்றல் தராசில் பச்சைக் கொழுந்தை அளக்கும் போதுகொழுந்தின் எடையில் மோசடி இடம்பெறுகின்றது. நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று நேரம் கொழுந்து நிலுவை இடம் பெறுகையில் சுமார் 10 கிலோ கிராம் வரை மோசடி இடம்பெறுகின்றது.

உண்மையான கொழுந்தின் எடையை எங்களால் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே, முகாமையாளரிடம் டிஜிற்றல் தராசு வேண்டாம். கடந்த காலத்தில் போல் சாரதாரண தராசை இனி கொழுந்து அளக்கப் பயன்படுத்துமாறு கோரினோம்.

ஆனால், முகாமையாளர் அதைச் செய்யாது இன்றும் டிஜிற்றல் தராசிலே கொழுந்தை அளக்க முற்படுகின்றார். ஆயிரம் ரூபா நாள்சம்பளம்அறிவிக்கப்பட்ட காலம் தொட்டே தோட்ட நிர்வாகம் எங்களுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கி விட்டது.

கொழுந்து இருக்கும் காலத்தில் எங்களால் 18 கிலோ கிராம் பச்சைக் கொழுந்து பறிக்க முடியும் ஆனால், கொழுந்து இல்லாத இந்தக் காலத்தில் எவ்வாறு 18 கிலோ எடுக்க முடியும்? 12,13 கிலோ எடுத்தால் அரை நாள் பெயரே போடுகின்றார்கள். நாங்கள் எப்படி எங்களது வாழ்கையைக் கொண்டு செல்வது?' என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் விடுதலைப்புலி சார்ந்தவர்களல்லர்!

## டிலான் எம்.பி. கருத்து



இலங்கையை விட்டு புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்கள் அல்லர் என்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

வன்னிப் போரின் பின் 12 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு செய்த ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் புலம்பெயர் சமூகத்துடன் பேச்சை நடத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

இன்று புலம்பெயர்ந்து வாழ்கின்ற அனைத்து தமிழர்களும் விடுதலைப்புலி சார்ந்தவர்கள் அல்லர். அனைத்து முஸ்லிம் மக்களும் சஹ்ரான் அல்லர்.

அதேபோல அனைத்து சிங்கள மக்களும் ஞானசார தேரரின் சீடர்களும் அல்லர். தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் யார்? ஜே.ஆரின் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு நேராக மக்களை விரட்டினார்கள்.

அப்பாவி மக்கள் தென்னிலங்கையில் கொலை செய்யப்பட்டார்கள்.

நான் அன்று என்னுடன் சட்டக்கல்லூரியில் கற்ற 33 தமிழ் மாணவர்களை அங்கு பாதுகாப்பாக மறைத்து வைத்து பம்பலப்பிட்டிய கல்லூரியில் ஒப்படைத்தேன். அவர்களில் 04 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளில் இணைந்து உயிரிழந்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேராத பலரும் நாட்டை விட்டுச்சென்றார்கள். அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பானவர்கள் அல்லர். போரின் பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்து 500 பேரை புனர்வாழ்வுக்கு உட்படுத்திய ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் பேச்சை எம்மால் நடத்த முடியும் என நம்புகின்றோம்.

ஆகவே அவர்களுடன் பேச்சு நடத்த எடுத்த முடிவானது சிறப்பான தலைவரால் எடுக்கப்பட்டதாகும். அவரது வாக்கு வங்கியைக்கூட நினைக்காமல் தான் இந்த முடிவை எடுத்தார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு எதிராகவும், பிரதமருக்கு எதிராகவும் வெளிநாடுகளில் மக்கள் கூச்சல் எழுப்பியமையை சிரித்த முகத்துடன் கூறிய மட்டக்களப்பு அரசியல்வாதி தேசப்பற்று அற்ற அநாதை இலங்கையில் மீண்டுமொரு தீவிரவாத தாக்குதலான்று நடத்தப்படப் போவதாக வெளியிட்ட தகவல் தொடர்பாக அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு





# 90 நாள்களுக்குப் பிறகு பூமிக்கு திரும்பிய சீன விண்வெளி வீரர்கள்!

சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையத்தில் தங்கியிருந்து விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைக்கும் பணியை மேற்கொண்டு வந்த 3 விண்வெளி வீரர்கள் 90 நாள்களுக்குப் பிறகு பூமிக்கு திரும்பினர்.

அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்துள்ளது. விண்வெளி தொடர்பான ஆய்வுக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இங்கு தங்கி ஆய்வு மேற்கொள்வது வழக்கம்.

இந்நிலையில் சீனாவானது தங்கள் நாட்டிற்கென சொந்தமாக விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்து வந்தது. விண்வெளியில் சீனா அமைத்து வரும் தியான்காங் ஆய்வு நிலையத்தின் பிரதானப் பகுதியான தியான்ஹே, கடந்த ஏப்ரல் மாதம் 29-ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளும் வீரர்கள் அதில் தங்கியிருப்பதற்குத் தேவையான பொருள்கள், உபகரணங்கள் அடங்கிய சரக்குக் கலமான தியான்ஷோ, கடந்த மாதம் செலுத்தப்பட்டு தியான்ஹே கலத்துடன் இணைக்கப்பட்டது.

தனது சொந்த விண்வெளி நிலையத்துக்கு 3 வீரர்களுடன் ஷென்ஷோ விண்வெளி ஓடம் கோபி பாலைவனத்தில் அமைந்துள்ள ஜிகுவான் ஏவுதளத்திலிருந்து கடந்த ஜூன் மாதம் விண்ணில் செலுத்தப்பட்டது.

அந்த விண்வெளி ஓடத்தில் நை ஹாய்செங் (56), லியூ போமிங் (54), தாங் ஹாங்போ (45) ஆகியோர் இருந்தனர். 90 நாள்கள் அங்கு தங்கியிருந்த அவர்கள் தியான்காங் விண்வெளி நிலையத்தைக் கட்டமைக்கும் கடினமான பணியில் ஈடுபட்டு அதனை வெற்றிகரமாக நிறைவு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து தங்களது பணிகளை நிறைவு செய்த அவர்கள் வெள்ளிக்கிழமை பூமியை நோக்கி திரும்பினர். அவர்கள் பயணித்த விண்கலம் சீனாவின் கோபி பாலைவனத்தில் தரையிறங்கியது. அவர்களை விண்கலத்திலிருந்து வெளியேற்றிய தொழில்நுட்ப பணியாளர்கள் அவர்களை மருத்துவ பரிசோதனையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

# பிரேஸில் சுகாதார அமைச்சருக்கு கொரோனாத் தொற்று உறுதி



பிரேஸில் நாட்டின் சுகாதார அமைச்சர் மார்செலோக் வெரோகா கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக ராய்டர்ஸ் முகமையில் செய்தி வெளியாகியுள்ளது.

அவர் கடந்த செவ்வாய்க்கிழமை, பிரேஸில் அதிபர் சயீர் போல் சனாரோவை அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இருக்கும் ஐ.நா. பொது சபைக்கு அழைத்து வந்த சில மணி நேரங்களுக்குப் பின் இந்தச் செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது என அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அமைச்சர் நல்ல உடல் நலத்தோடு இருக்கிறார் எனவும், அவர் நியூயோர்க்கிலேயே தனிமைப்படுத்தலில் இருப்பார் என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. மற்ற அரசு தரப்பினர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டபோது வேறுயாரும் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என அரசு தரப்பிலிருந்து கூறப்பட்டுள்ளது.



# மோதலை முடிவுக்கு கொண்டுவர பிரான்ஸ் அமெரிக்கா விருப்பம்

ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட மோதலை முடிவுக்கு கொண்டுவர பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இதுதொடர்பாக, அமெரிக்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதிகள் இப்போது கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஜோ பைடன் மற்றும் இம்மானுவேல் மக்ரோன் கடந்த புதன்கிழமை இது குறித்து அரை மணி நேரம் தொலைபேசியில் பேசினார்கள். அவர்கள் அடுத்த மாத இறுதியில் ஐரோப்பாவில் சந்திக்கவிருக்கிறார்கள்.

இதன்போது, இதுகுறித்து விரிவாக பேசி சுமூகமான தீர்வு எட்டப்படுமென நம்பப்படுகின்றது. முன்னதாக ஆஸ்திரேலியாவுக்கான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உள்ளடக்கிய முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, அந்த நாடு உடனடியாக தூதர்களை திரும்பப்பெற்றது.

இருப்பினும், வொஷிங்டனுக்கான தூதர் இப்போது தனது பதவிக்கு திரும்புவார். கான்பெர்ராவுக்கான தூதர் இதைச் செய்வாரா என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை. முக்கியத்தும் வாய்ந்த ஆக்கஸ் என்று அழைக்கப்படும் கூட்டுத் திட்டத்தில், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்தன.

இதன்போது முன்னதாக பிரான்ஸ் நாட்டின் நேவல் குழுமத்திடமிருந்து அணு ஆற்றலால் இயங்கும் மற்றும் அணு ஆயுத்தை ஏவும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்க செய்திருந்த ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா ரத்து செய்தது. 3,700 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதால், இந்த கூட்டணி மீது பிரான்ஸ் கடும் கோபம் கொண்டுள்ளது.



# நைஜீரியாவில் கொலரா நோய் 329பேர் பரிதாபமாக உயிரிழப்பு

வடக்கு நைஜீரியாவின் கானோ மாநிலத்தில் கொலரா நோய்த் தொற்றால், குறைந்தது 329 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் மாநிலத்தின் 44 உள்ளாட்சிப் பகுதிகளில் 11,475 கொலரா தொற்றுகள் பதிவாகியுள்ளன என மாநிலத்தின் நோய் கண்காணிப்பு அதிகாரி சுலைமான் இலியாசு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நிலைவரப்படி மாநிலத்தின் மூன்று உள்ளாட்சிப் பகுதிகளில் 31பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

மேலும், 11,115பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர். 329பேர் உயிரிழந்துள்ளனர். காலரா நோய்களின் எண்ணிக்கையில் நாட்டின் இரண்டாவது இடத்தில் கனோ இருப்பதாக அவர் கூறினார்.

இந்த நோயை பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மாநில அரசாங்கம் கொலரா சிகிச்சை மையங்களை நிறுவியுள்ளதுடன் சமூக அணிதிரட்டல் மற்றும் சமூக விழிப்புணர்வை தீவிரப்படுத்தியுள்ளது.

கொலரா என்பது மிகவும் தீவிரமான நோயாகும். இது கடுமையான நீரிழப்பால் மரணத்திற்கு வழிவகுக்கும் கடுமையான நீர் வயிற்றுப்போக்கின் திடீர் தாக்குதலால் வகைப்படுத்தப்படுகிறது. நைஜீரியாவில் கொலரா நோய் தொடர்ந்து நீடித்து வருகிறது. ஆண்டுதோறும் பெரும்பாலும் மழைக்காலங்களில் மற்றும் அடிக்கடி மோசமான சுகாதாரம், அதிக கூட்டம், சுத்தமான உணவு மற்றும் தண்ணீர் இல்லாத பகுதிகளில், மற்றும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் ஒரு பொதுவான இடங்களில் இருந்து பரவுகின்றது.

ஆபிரிக்க நாடுகளில் அடிக்கடி நிகழும் வயிற்றுப் போக்கு நோயானது இந்தாண்டு மிகத்தீவிரமாக நைஜீரிய நாட்டை பாதித்திருக்கிறது. தற்போது வரை 23 மாநிலங்களில் 67,903 பேருக்கு கொலரா நோய் தாக்கியிருப்பதாகவும் அதில் 2,423 பேர் உயிரிழந்திருக்கின்றனர் எனவும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து நாட்டின் நோய் தடுப்புத் துறை அதிகாரி சிக்வே ஹெக்வேசு கூறுகையில், 'வயிற்றுப் போக்கால் உயிரிழந்தவர்களில் 5 – 14 வயதுள்ள குழந்தைகளே அதிகம். இறப்பு வீதமானது ஆண்கள் 51 சதவீதமாகவும் பெண்கள் 49 சதவீதமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது' என கூறினார். ஒழுங்கற்ற சுகாதாரம், மக்கள் நெருக்கம், கனமழையால் உருவான குட்டை நீர்கள், குப்பைகள் நிறைந்த பகுதிகள் மூலம் கொலரா கட்டுக்கடங்காமல் பரவியிருக்கிறது என அரசாங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# தமிழகம் முழுவதும் தேடுதல் வேட்டை ஒரே இரவில் 560 ரவுடிகள் கைது



தமிழகத்தில் ரவுடியிசத்தை மொத்தமாக ஒழிக்கும் வகையில் முக்கியமான நடவடிக்கையொன்றை நேற்று இரவோடு இரவாக தமிழ்நாட்டு பொலிஸார் மேற்கொண்டனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில்நேற்று இரவும் இன்று அதிகாலையும் பொலிஸார் திடீர் தேடுதல் வேட்டையை நடத்தி 560 ரவுடிகளைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சென்னையில் 700 இடங்களில் நடந்த சோதனையில் 70 ரவுடிகள் கைது செய்யப்பட்டனர் எனவும் கஞ்சா, மாவா போன்ற சட்டவிரோதப் போதைப் பொருள்கள் கொண்ட பொட்டலங்களும் சிக்கியதாகவும் கூறப்படுகிறது.

தமிழகம் முழுவதும் கைதான ரவுடிகளிடம் இருந்து 256 அரிவாள், கத்திகள், 3 துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல குற்றச்செயல்களில் தேடப்பட்டு வந்தவர்கள், சந்தேக வழக்குகளின் பட்டியலில் இருந்தவர்கள், பிணையில் வெளி வந்துவிட்டு வேறு ஊர்களுக்குத் தப்பிச்சென்று தலைமறைவானவர்கள் என்று பலர் மொத்தமாக கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு பொலிஸார் இதுவரை மேற்கொண்ட பெரிய தேடுதல் வேட்டையாக இது கருதப்படுகிறது.

டி.ஜி.பி. சைலேந்திரபாபுவின் உத்தரவின்பேரில் ரவுடிகளின் அராஜகத்தை ஒடுக்க பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர் என உயர் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் டி.ஜி.பியாக பொறுப்பேற்ற சைலேந்திரபாபு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். முக்கியமாக ரவுடியிசம், கட்டப்பஞ்சாயத்து போன்றவற்றை ஒழிக்க வேண்டும் என்று என்பதற்காக தீவிரமாக திட்டங்களை வகுத்து வருகிறார். டி.ஜி.பியாக பொறுப்பேற்றதில் இருந்து தமிழகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சைலேந்திரபாபு தீவிர கவனம் செலுத்தி வருகிறார் என்றும் பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## பா.ஜனதா வகுப்புவாத அரசியலுக்கு திரும்பிவிட்டது பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் மாயாவதி கருத்து



உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலுக்காக பா.ஜனதா கட்சி வகுப்புவாத அரசியலுக்கு மீண்டும் திரும்பிவிட்டது என மாயாவதி குற்றஞ்சாட்டியுள்ளார். பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவரான மாயாவதி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தல் நெருங்குவதால், பா.ஜனதாகட்சி தனது வகுப்புவாத அரசியலுக்கு மீண்டும் திரும்பிவிட்டது. அதன் வளர்ச்சிக் கோஷங்கள் வெற்று முழக்கம் என்று தெரிந்துவிட்டது.

இந்து-முஸ்லிம் பிரிவினை உள்ளிட்ட மத உணர்வுகளுடன் பா.ஜனதா விளையாடத் தொடங்கிவிட்டது. ஆனால், மக்களை மீண்டும் ஏமாற்ற முடியாது. மக்கள் மனநிலையில் இருந்து இது தெளிவாகிறது. உத்தரப்பிரதேசத்தில் தனிநபர் வருமானம் குறைந்துவிட்டதாக ரிசர்வ் வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. மக்கள் இன்னும் பின்தங்கிய நிலையில்தான் உள்ளனர். இரட்டை இயந்திர அரசு என்று பெருமிதமடித்துக் கொள்ளும் பா.ஜனதாவின் ஆட்சியிருந்தும் இந்த நிலைமையா? என்று அவர் தெரிவித்துள்ளார்.



## அசாமில் ஆக்கிரமிப்பு அகற்றலில் மோதல் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் உயிரிழப்பு

அசாமில் டர்ரங் மாவட்டம் டோல்பூர் பகுதியில் அரசுக்குச் சொந்தமான 602.04 ஹெக்டேயர் இடத்தில் ஆக்கிரமித்து வசித்து வந்தவர்களது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கடந்த சில நாள்களில் சுமார் 800 குடும்பத்தினர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். அங்கு ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த 4 கோவில் உள்ளிட்ட மதச்சின்னங்களும் அகற்றப்பட்டன.

வெளியேற்றப்பட்ட குடும்பத்தினர் தங்களை அங்கிருந்து அகற்றுவதை நிறுத்த வேண்டும் என்றும் தங்களுக்கு மாற்று வசிப்பிடம், நிவாரணம் போன்றவற்றை வழங்கக் கோரியும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் வெடித்து போராட்ட களம் வன்முறைக் களமானது. நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் இரண்டு பேர் பலியாகினர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. வன்முறையில் பலர் காயம் அடைந்தனர். இந்தச் சம்பவங்களால் டோல்பூர் சுற்றுவட்டாரப் பகுதி பதற்றமாகக் காணப்படுவதாகவும் பொலிஸார் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் குறித்து அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறும்போது, ஆக்கிரமிப்புகளை அகற்றும்பணி தொடர்ந்து நடைபெறும். பொலிஸார் தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்றும் பணிக்கான பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.



## தடுப்பூசி செலுத்தியோருக்கு மட்டுமே அனுமதி குஜராத்தில் விடுதி, உணவக சங்கம் அறிக்கை

குஜராத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தாதவர்களை உணவகங்களில் அனுமதிக்க வேண்டாம் என்று தொழிற்சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக குஜராத் விடுதிகள் மற்றும் உணவகங்களின் சங்கத் தலைவர் நரேந்திர சோமானி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், கொரோனாத் தடுப்பூசியின் முதல் தவணையாவது செலுத்திய வாடிக்கையாளர்களை மட்டும் அனுமதிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். திருமணம் மற்றும் பண்டிகை காலங்கள் நெருங்குவதால், கொரோனா பரவலைத் தடுக்க உணவகங்களின் உரிமையாளர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

மூன்றாவது அலை தீவிரமடைந்தால், மீண்டும் பொது முடக்கம் அமுலாகி தொழில் பாதிக்கும் என்பதால் இந்த முயற்சிகளை முன்னெச்சரிக்கையாகப் பின்பற்றுமாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## இங்கிலாந்தின் கோவிஷீல்ட் தடுப்பூசி நிலைப்பாடு; பேச்சுகளில் இந்தியா தொடர்ந்தும் அழுத்தம்

இந்தியாவின் கொவிஷீல்ட் தடுப்பூசியை அங்கீகரிக்காத இங்கிலாந்து, இந்தத் தடுப்பூசியைச் செலுத்திவிட்டு தனது நாட்டுக்குள் வரும் இந்தியர்கள் 10 நாள்கள் தனிமைப்படுத்தப்படவேண்டும் என்று அறிவித்திருந்தது. இந்தியாவில் அதிகமாக செலுத்தப்பட்டது இந்தத் தடுப்பூசிதான் என்பதால், கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு அங்கீகாரம் கேட்டு இந்திய மத்திய அரசு இங்கிலாந்துக்கு அழுத்தம் கொடுத்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதைத்தொடர்ந்து கொவிஷீல்ட் தடுப்பூசியை இங்கிலாந்து அங்கீகரித்து அறிவிப்பு வெளியிட்டது. அதேநேரம் இந்தத் தடுப்பூசியைச் செலுத்தியவர்களுக்கு 10 நாள்கள் தனிமைப்படுத்தல் என்ற அறிவிப்பு இன்னும் தொடர்கிறது. இந்த விடயம் இரு நாடுகளுக்குமிடையே கருத்து மோதலை ஏற்படுத்திய நிலையில், தடுப்பூசிச் சான்றிதழ் விநியோகம் தொடர்பாக இந்தியாவும் இங்கிலாந்தும் பேச்சு நடத்தி வருகின்றன என இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதர் அலெக்ஸ் எல்லிஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில், 'கொரோனா சான்றிதழ் விநியோகம் தொடர்பாக இந்தியாவின் தேசிய சுகாதார ஆணைய தலைமை அதிகாரி சர்மாவுடன் தொழில்நுட்ப ரீதியிலான பேச்சுகள் நடந்து வருகின்றன.

இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் சான்றிதழ் செயல்முறைக்கு தொழில்நுட்ப கவலைகளை எழுப்பவில்லை. பயணத்தை எளிதாக்குவது மற்றும் இங்கிலாந்து மற்றும் இந்தியாவின் பொதுச்சுகாதாரத்தை முழுமையாகப் பாதுகாப்பது ஆகியவையே எங்கள் கூட்டு நோக்கத்தின் முக்கிய அம்சம் ஆகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# ராஜபக்ஷ குடும்பப் பெயர்களைப் பயன்படுத்தி மட்டக்களப்பில் சட்டவிரோத மணல் அகழ்வு



தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவாக நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனத் தெரிவித்த இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இளைஞர்களை கைது செய்து தடுத்து வைக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை எனவும், நேற்று மட்டக்களப்பில் கருத்துத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது–

ராஜபக்ஷ குடும்பப் பெயர்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இந் நிலையில், சட்டவிரோத நடவடிக்கைக ளுக்கு எமது அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரவளிக்காது எனக் குறிப்பிட்டார்.

தேவையற்ற விதத்தில் இளைஞர்களை கைதுசெய்து தடுத்துவைக்க வேண்டிய அவசியம் எமது அரசாங்கத்துக்கு இல்லை. தெரியாமல் செய்த குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ இளைஞர்கள் நாட்டின் பெறுமதிளான சொத்துக்கள் என்றார் .

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் எனக்கூறி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தால் அதிகமான விடயங்களைச் செய்ய முடியவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல விடங்களைப் பின்பற்ற வேண்டும் என்றார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அதனடிப்படையில் இதுவரை 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

பேஸ்புக்கில், படங்களை பதிவிட்ட குற்றங்களுக்காக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து நீதித் துறையுடன் பேசி, அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படும். குறித்த கைதிக ளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்து டன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சட்டவிரோத மணல் அகழ்விற்கு எமது அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் குற்றம் சுமத்துகிறார்கள். இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கூச்சல் இடுவதனாலோ அல்லது ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்துவதனால் எவ்விதமான பயனும் கிடைக்காது என்றார்.

சட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் தெரியவந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் அவ்வாறான நிலையில் சாட்சியமளிக்க நாங்களும் வருகிறோம். எமக்கு எதிராக கூச்சலிடுவது பொலிஸாரின் புத்தகங்களில் பதியப்படுவதில்லை. சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் முன்வரவேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.



# கொக்கட்டிச்சோலை கிராமத்தின் எல்லையில் பற்றைக்காடுகள் இனந்தெரியாதோரால் அழிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கொக்கட்டிச்சோலை கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ள ஆற்றாங்கரையை அண்டிய களப்பு பகுதியில் உள்ள பற்றைக்காடுகளை, இனந்தெரியாதோர் அண்மைக்காலங்களாக அழித்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் உள்ள பற்றைகள் காடுகள் வெட்டப்பட்டு, தேவையான கம்புகள், மரங்கள் எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றன. அவ்வாறு வெட்டப்பட்ட மரங்களில் இருந்த கிளைகள் நீண்ட நாள்களாக அவ்விடத்திலே இருந்து விறகுகளாக மாற்றமடைந்திருக்கின்றன. அவ்வாறான விறகுகளை இப்பிரதேசத்தில் உள்ள மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை, அரசடித்தீவு, அம்பிளாந்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த நபர்கள் எடுத்துச்சென்றுள்ளனர்.

பெண்கள் பலர் தலையில் சுமந்தும், துவிச்சக்கரவண்டியிலும், ஏனைய வாகனங்களிலும் ஏற்றிச் சென்றிருக்கின்றனர். இது தொடர்பில் குறித்த பகுதியின் பிரதேச செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உரிய இடத்திற்கு சென்று பார்வையிட்டு பொலிஸாரையும் அழைத்து, குறித்த நபர்களை எச்சரித்து அனுப்பியிருந்த சம்பமும் அண்மையில் பதிவாகியிருக்கின்றது.

வாவிகளை அண்டிய களப்புக்களில் உள்ள மரங்கள், பற்றைக்காடுகளினால் பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. குறிப்பாக, இங்குள்ள சில இனமரங்களின் இளந்தளிர்கள் கறி சமைக்க, வினாகிரி தயாரிக்க, விறகுக்கு, பூச்சி புழு அரிப்பிலிருந்து பாதுகாக்க, படகுகள், கட்டடம், மீன்பிடி உபகரணங்களை செய்ய, விவசாயத்திற்கு பசளையாகப் பயன்படுத்த, இறால் வளர்ப்புக்கு, கால்நடைகளின் தீவனமாக, எலும்பு முறிவு, காயங்கள், தோல்நோய் போன்றவற்றிற்கு மருந்தாக, மீனுக்கு உணவாக, மீன் இனப்பெருக்கத்திற்கான இடமாக, மண்ணரிப்பை தடைசெய்வதற்கும் இவ்வாறான காடுகள் பெரிதும் உதவுகின்றன. அதேவேளை, வாவிகளில் மாசுபடலை குறைப்பதற்கும், பறவை, விலங்குகள் தங்கும் இடமாகவும் அமைந்துள்ளன. இவ்வாறான காடுகளை அழிப்பதனை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



# வீட்டுத்திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு காசோலை வழங்கல்

ஜனாதிபதியின் சௌபாக்யா திட்டத்திற்கமைவாக 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' எனும் தொனிப்பொருளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கான காசோலை வழங்குவதற்கான நிகழ்வு நேற்று சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ஜெகநாதன் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி வீடமைப்பு அதிகார சபை அலுவலுகத்தில் இடம்பெற்றது.

தற்போதுள்ள கொரோனா முடக்கத்திற்கு மத்தியிலும் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான பிரதமரின் அபிவிருத்தி திட்டபணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மட்டு. மாநகர ஆணையாளருக்கு எதிரான வழக்கு; பத்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி

மட்டக்களப்பு மாநகர ஆணையாளருக்கு எதிரான வழக்கில் அவர் 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது–

மட்டக்களப்பு மாநகர சபையால் ஆணையாளர் எம்.தயாபரன் அவர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த பத்து வகையான அதிகாரங்களை மாநகரசபையின் மற்றுமொரு தீர்மானத்தின் மூலம் வேறு உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

குறித்த அதிகாரங்களை ஆணையாளர் தொடர்ந்தும் பயன்படுத்தியதனால், மாநகர முதல்வர் டி.சரவணபவன் அவர்களினால் மாநகர ஆணையாளர், அவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு மாகாண மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அவர்களால் செய்யப் பட்ட சமர்ப்பணங்கள் அடிப்படையில் 01.04.2021ஆம் திகதி நீதிமன்றத்தினால் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது.

குறித்த கட்டளையில், பத்து வகையான அதிகாரங்களையும் மறு அறிவித்தல் வரை ஆணையாளர் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மாநகர ஆணையாளர் பல சந்தர்ப்பங்களில் மீறுகின்ற விதத்தில் செயற்பட்டமையினால் இச் செயற்பாடானது நீதிமன்றத்தினை அவமதிப்பதாகத் தெரிவித்து மாநகர முதல்வரினால், ஆணையாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கானது கடந்த மாதம் 19ஆம் திகதி ஆதரிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாநகர முதல்வர் சார்பில் தோன்றிய சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி யு.எல்.அலி சக்கி, சட்டத்தரணிகளான ஏ.எல்.ஆஸாத் மற்றும் என்.கமலதாசன் ஆகியோரால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையில் மாநகர ஆணையாளரை 13.09.2021ஆம் திகதி மன்றில் தோன்றுமாறு அழைப்பாணை அனுப்ப மாகாண மேல் நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது.

குறித்த நீதிமன்ற அழைப்பாணையை மாநர ஆணையாளரிடம் சேர்ப்பிப்பதற்காக நீதிமன்ற பிஸ்கால் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

இதனால் குறித்த வழக்கானது கடந்த 15ஆம் திகதி அழைக்கப்பட்ட போது, மாநகர ஆணையாளரை 23.09.2021ஆம் திகதி மன்றில் தோன்றுமாறு பொலிஸாருடாக மீண்டும் அழைப்பாணை அனுப்ப மேல் நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது.

குறித்த வழக்கானது நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாநகர முதல்வர் சார்பில் சட்டத்தரணி ஏ.எல்.ஆஸாத் அவர்கள் தோன்றியிருந்தமையுடன், ஆணையாளர் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் தோன்றியிருந்தார்.

மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல் லாஹ் அவர்களினால் பத்து லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு ஆணையாளர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த வழக்கானது எதிர்வரும் 11.10.2021ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

# மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி கொல்கத்தா அணி வெற்றி பெற்றது



ஐ.பி.எல். தொடரின் 34 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி அடுத்த சுற்றுக்கு நுழைவதற்கான தனது வாய்ப்பினை வலுப்படுத்தியுள்ளது.

அபுதாபியில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதியிருந்தன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. குயின்ரன் டி கொக் 55, ரோகித் சர்மா 33 ஓட்டங்களை எடுத்தனர். கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பிரசீத் கிருஸ்னா மற்றும் லோகி பெர்குசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சுனில் நரேன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 156 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 15.1 ஓவர்களில் வெற்றியிலக்கை எட்டியது. ராகுல் திரிபாத்தி ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் 53 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணி வீரர் சுனில் நரைன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி தான் விளையாடிய 9 போட்டிகளில் நான்கில் வெற்றி, ஐந்தில் தோல்விகளுடன் மொத்தமாக, 8 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. தான் விளையாடிய 9 போட்டிகளில் நான்கில் வெற்றி, ஐந்தில் தோல்விகளுடன் மும்பை இந்தியன்ஸ் அணி மொத்தமாக 8 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை பளுதூக்கல் அணியில் இடம்பிடித்தார் வடக்கின் ஆர்ஷிகா



பொதுநலவாய பளுதூக்கல் சம்பியன்ஷிப் தொடர் மற்றும் உலக பளுதூக்கல் சம்பியன்ஷிப் ஆகிய தொடர்களில் பங்குபற்றவுள்ள 20 பேர் கொண்ட இலங்கை அணியை இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன் பெண்கள் பிரிவில் வடக்கின் நட்சத்திர பளுதூக்கல் வீராங்கனையான விஜயபாஸ்கர் ஆர்ஷிகா உள்வாங்கப்பட்டுள்ளார். இவ்வருட முற்பகுதியில் பொலன்னறுவையில் நடைபெற்ற இலங்கை பளுதூக்கல் அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்கின்ற போட்டியில் பங்கு கொண்ட ஆர்ஷிகா, பெண்களுக்கான 71 கிலோ கிராம் எடைப் பிரிவில் ஸ்னெச் மற்றும் க்ளீன் அன்ட் ஜெர்க் முறைகளில் தனது தேசிய சாதனைகளையே முறியடித்திருந்தார். இம்முறை பொதுநலவவாய பளுதூக்கல் சம்பியன் ஷிப் தொடரில் 64 கிலோ கிராம் எடைப் பிரிவில் ஆர்ஷிகா போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2016 இல் மலேஷியாவில் நடைபெற்ற பொதுநலவவாய பளுதூக்கல் சம்பியன்ஷிப் தொடரில் வெண்கலப் பதக்கம் வென்ற ஆர்ஷிகா, இறுதியாக கடந்த 2019 இல் நேபாளத்தில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுக்களில் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பொதுநலவவாய பளுதூக்கல் சம்பியன்ஷிப் தொடர் மற்றும் உலக பளுதூக்கல் சம்பியன்ஷிப் ஆகிய இரண்டு தொடர்களையும் ஒன்றாக நடத்த உலக மெய்வல்லுனர் சம்மேளனம் தீர்மானித்துள்ளதுடன், இரண்டு போட்டிகளுக்கும் வெவ்வேறாக பதக்கங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த இரண்டு போட்டிகளும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை உஸ்பெகிஸ்தானின் டஸ்கென்ட் நகரில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# எல்.பி.எல். தொடரின் திகதிகள் அறிவிப்பு அணிகளுக்கான வீரர்கள் பதிவு ஆரம்பம்

லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்.) இரண்டாவது பருவகால போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன்முறையாக கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் எல்.பி.எல். தொடர் ஆரம்பமாகியிருந்தது. இந்தப்போட்டித் தொடரில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி சம்பியனாகியிருந்தது.

இந்த ஆண்டு ஜுலை 30 முதல் ஒகஸ்ட் 22 ஆம் திகதிவரை நடைபெறவிருந்த எல்.பி.எல். தொடர், கொவிட்-19 தொற்றுக் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது. எல்.பி.எல். தொடருக்கான வீரர்கள் பதிவு, எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஒஸ்ட்ரவா ஓபன் டென்னிஸ் தொடர் காலிறுதியில் எலனா ரிபாகினா

செக் குடியரசில் நடைபெறும் பனாகா ஒஸ்ட்ரவா ஓபன் மகளிர் டென்னிஸ் தொடரில் கசகிஸ்தான வீராங்கனை எலனா ரிபாகினா காலிறுதிக்கு தகுதிபெற்றார். காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நேற்று 22வயது வீராங்கனை எலனா ரிபாகினா, 29 வயதாகும் போலந்து வீராங்கனை மக்டா லினெட் இருவரும் மோதினர்.

முதல் சுற்றை எலனா 6 - 3 என்ற புள்ளி கணக்கிலும், 2 ஆவது செட்டை மக்டா 6 - 2 என்ற புள்ளிக் கணக்கிலும் எளிதில் கைப்பற்றினர். யாருக்கு வெற்றி என்பதை முடிவு செய்யும் மூன்றாவது செட்டில் அதிகம் எதிர்பார்ப்பு இருந்தது. அதையும் எலனா 6 - 1 என்ற புள்ளிக் கணக்கில் சீக்கிரத்தில் வசப்படுத்தினார். ஒரு மணித்தியாலமும் 37 நிமிடங்களும் நடந்த போட்டியை 2-1 என்ற செட்களில் வென்ற எலனா காலிறுதிக்கு முன்னேறினார். மரியா சக்கரி, இகா ஸ்வய்டெக், அனெட் கொன்டவைட், பெட்ரோ கிவிதோவா ஆகியோர் ஏற்கனவே காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

# ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான பாடலை அறிமுகம் செய்தது ஐ.சி.சி.



எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) இந்தத் தொடருக்கான தீம் பாடலை அறிமுகம் செய்துள்ளது.

ஒன்றரை நிமிடங்கள் அளவுடைய இந்த பாடலை அனிமேஷன் வீடியோவாக வெளியிட்டுள்ளனர்.

மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்ற இந்தத் தொடரை இந்தியா நடத்துகிறது. இந்தத் தொடருக்கான பாடலை பொலிவுட் சினிமா இசையமைப்பாளர் அமித் திரிவேதி இசையமைத்து உருவாக்கியிருக்கிறார்.

# உள்ளே கோட்டா வெளியே உருத்ரா!

## பரபரத்த நியூயோர்க் என கொழும்பு ஊடகம் செய்தி

சிறிலங்கா அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ நியூயோர்க் ஐ.நா. சபையின் உள்ளே, உள்ளகபொறிமுறை தொடர்பாகப் பேசிக் கொண்டிருக்க, சிறிலங்காவை சர்தேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் ஐ.நாவின் வெளியே குரல் எழுப்பினார் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

'கோட்டாவே திரும்பிப் போ' என்ற முழக்கத்துடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றை கடந்த புதன்கிழமை ஐ.நாவின் முன்னால் மேற்கொண்டிருந்தது.

ஒரு போர்குற்றவாளியை ஐ.நா. தனது அரங்கில் உரையாற்ற அனுமதிக்கப்பட்டதைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைகின்றோம். இனப்படுகொலையாளி ஒமர் அல்-பஷீர் இந்த அரங்கில் உரையாற்றினார் என்ற உண்மையை அறிவோம். உகண்டா நாட்டு சர்வாதிகாரி இடி அமீன் ஒருமுறை இந்த அரங்கில் உரையாற்றினார் என்பதையும் அறிவோம். இந்நிலையில் இந்த அரங்கில் (ஐ.நா.) கோட்டா உரையாற்ற அனுமதிக்கப்பட்டதில் எங்களுக்கு ஆச்சரியமில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது குரலெழுப்பியிருந்தார்.

சர்வதேச நீதிப்பொறிமுறையை நிராகரித்து உள்ளக பொறிமுறை தொடர்பாகத் தனது நிலைப்பாட்டை கோட்டா வெளிப்படுத்தியிருந்த நிலையில், அதற்கு எதிர்வினையாற்றிய பிரதமர் வி.உருத்திரகுமாரன், பொறுப்புக்கூறலுக்கானசர்வதேசநீதிப்பொறிமுறை என்பது தமிழர்களின் நிலைப்பாடு மட்டுமன்றி, அனைத்துலக சமூகத்தின் நிலைப்பாடு என்பதை வலியுறுத்தினார். சிறிலங்கா அரசு, அதன் அரசாங்க கட்டமைப்பு யாவிலும் ஆழ வேரூன்றியுள்ள இனநாயகம், இனவெறியின் உண்மையை உலகம் அறியும் என்பதோடு, இதன் ஊடாகத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இடமில்லை என்பதை, சிறிலங்காவின் வரலாறு பல தசாப்தங்களாக நன்கு நிரூபித்துள்ளது என பிரதமர் வி.உருத்திரகுமாரன் இடித்துரைத்திருந்தார்.

தமிழினத்தின் மீது நடந்தேறிய குற்றங்கள் என்பவை ஒரு தனிநபராலோ அல்லது தனிப்பட்டாலியனாலோ அல்ல, மாறாக சிறிலங்கா அரசால் நிகழ்த்தப்பட்டது. குற்றத்தை புரிந்தவரே நீதிபதியாக இருக்க முடியாது என்பது பொது அறிவு மற்றும் அடிப்படை சட்டக் கொள்கையாகும் என்பதையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் குறித்துரைத்திருந்தார்.

கோட்டாபயவுக்கு தார்மீக தைரியம் இருந்தால், சிறிலங்காவின் தலைவராக ரோம் சட்டத்தில் கைச்சாத்திட்டு, பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குச் சமர்ப்பிக்கு மாறுநாங்கள்சவால்விடுகிறோம் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்திருந்தமையோடு, அவர் அதை செய்ய மாட்டார் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் அவர் ஒரு கோழை என இடித்துரைத்தார்.

ஐ.நாவில் உரையாற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஐ.நாவின் நெறிமுறைகள் அனுமதித்தாலும், 1987 ஆம் ஆண்டு ஐ.நாவில் பொதுச் சபைக்கு வருவதற்கு அப்போதைய ஒஸ்திரிய அதிபர் கர்ட் வால்ட்ஹெய்முக்கு விசா வழங்க மறுத்ததைப் போலவே, கோட்டாவுக்கும் அமெரிக்கா அனுமதி மறுத்திருக்கலாம் என்பதையும் கூற வேண்டும். இரண்டாம் உலகப் போரில் அவர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டதையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை, கோட்டாவை தனது கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்து, எதிர்காலத்தில் அவர் நுழைவதை மறுக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம் எனக் கோரியிருந்த வி.உருத்திரகுமாரன், இன்று கோட்டாவுக்கு சத்தமாகவும் தெளிவாகவும் இங்கிருந்து ஒரு செய்தியை அனுப்ப விரும்புகிறோம். பஷீருக்கு என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அவருடைய அணியில் சேரும் நாள் வெகுதொலைவில் இல்லை என பிரதமர் வி.உருத்திரகுமாரன் உள்ளே உரையாற்றிக் கொண்டிருந்த சிறிலங்கா அதிபர் கோட்டாபயவை நோக்கி இடித்துரைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களை நசுக்கும் செயற்பாட்டில் அரசாங்கம்!

## ஈ.சரவணபவன் காட்டம்



அஹிம்சை வழியில் போராடி உயிர்நீத்தவருக்கு, அஹிம்சை வழியில் அஞ்சலி செலுத்த முயன்றவர்கள் மீது பொலிஸார் அதிகாரப் பலத்தைப் பிரயோகித்துள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் தியாகி திலீபனை அஞ்சலிக்க முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

தமிழ் மக்களுக்காக அஹிம்சை வழியில் போராடி உயிர்நீத்த தியாகி திலீபனுக்கு, அமைதியான முறையில் அஞ்சலி செலுத்த முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையைக் கேள்விக்குறியாக்கும் வகையில், அதிகார பலத்தைப் பிரயோகித்து, அவரைக் குண் டுக்கட்டாக தூக்கி வாகனத்தில் ஏற்றிச்சென்றுள்ளனர். அஞ்சலிப்பதற்காக ஏற்றப்பட்ட சுடரை காலால் நசுக்கி அணைத்துள்ளனர். இவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் மக்களுக்கு நேசக் கரம் நீட்டுகின்றார். ஆனால் நாட்டில் அரசும், அதன் ஏவலாளர்களும் தமிழ் மக்களை நசுக்கும் செயலிலேயே ஈடுபடுகின்றனர்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கூட நாட்டில் மறுக்கப்படுகின்றன. அதன் ஓர் அங்கமே நாடாளுமன்ற உறுப்பினரின் கைது நடவடிக்கை.

குடாநாட்டில் வன்முறைகள், போதைப்பொருள் பாவனை தலைவிரித்தாடும் நிலையில், அவற்றையெல்லாம் கண்டும் காணாது இருக்கும் பொலிஸார், தமிழ் மக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ளும் போது பாய்ந்து விழுந்து அவற்றைத் தடுப்பதற்கு என்ன என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வது வழமையாகிவிட்டது.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைத் தடுப்பதற்கு கொரோனா நிலைமையைக் கையில் எடுக்கும் பொலிஸார், மதுக்கடைகளில் கூட்டம் திரளும்போது பாதுகாப்புக்கு நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் உரிமைகளைத் தடுப்பதில் காட்டும் அக்கறையைப் பொலிஸார், வன்முறைகளைத் தடுப்பதிலும், சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் காட்ட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அஜித் நிவார்ட் கப்ரால் தொடர்பில் அடிப்படை உரிமை மனு தாக்கல்

இலங்கை அரசாங்கத்தின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ராலை, மத்திய வங்கியின் ஆளுநராக, நியமிப்பதற்கு, எந்த ஒரு சட்டரீதியான காரணமும் இல்லை என்று அறிவிக்கக்கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார நேற்று (வியாழக்கிழமை) உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், மத்திய வங்கியின் கண்காணிப்பு சபையினர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆளும் அரசியல் கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரலை மேலும் மேம்படுத்தும் நோக்கில் கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தில், தேசிய நோக்கங்கள் மற்றும் பொது நலன்கள் எதுவும் இல்லை என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அஜித் நிவார்ட் கப்ரால், கடந்த காலத்தில் செயற்பட்ட விதத்தின் அடிப்படையில், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை வகிப்பதற்குத் தேவையான திறமை, நேர்மை மற்றும் பொறுப்பு அவருக்கு இல்லை என்பதை நிரூபித்துள்ளார் என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் வர்த்தக தடுப்பு நடவடிக்கை; ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்குப் பாராட்டு



போதைப்பொருள் வர்த்தக தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கர் இந்த பாராட்டை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஹானா சிங்கர், பாதுகாப்புச் செயலளார் கமால் குணரட்னவை சந்தித்தார்.

போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளை ஒழிக்கும் இலங்கையின் முனைப்பு பிராந்திய வலயத்துக்கே ஆரோக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அண்மைய நாள்களில் இலங்கை பாதுகாப்புத் தரப்பினர் சுமார் ஒரு தொன் எடையுடைய சட்டவிரோத போதைப் பொருள்களை மீட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளும் காத்திரமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரம் சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் விவகாரம்; மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் விசாரணை

*இலங்கையின் முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தொடர்புடைய குற்றச்சாட்டுகள் குறித்த சுயாதீன விசாரணைக்காக, மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.*

*நீதியமைச்சர் அலி சப்றி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். லொஹான் ரத்வத்த, வெலிக்கடை சிறையில் அத்துமீறி பிரவேசித்தமை மற்றும் அநுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளார்.*

*இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் சுயாதீன விசாரணைகளுக்கு கோரிக்கை விடுத்த நிலையிலேயே முன்னாள் நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தனவால் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2021இல் வெளியிடப்பெற்றது.